தந்தை பெரியார் வெறும் படமல்ல; பாடம்!

கோவை 'பெரியார் அறிவுலகத்துக்கு' அரசு விடுமுறை கூடாது!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக். 23- மதப் பண்டிகை நாட்களில் "பெரியார் அறிவுலக''த்துக்கு விடுமுறை கூடாது! விடுமுறை நாட்களில் அதைப் பயன்படுத்தவே பொதுமக்கள் விரும்புவார்கள்! இதை தமிழ்நாடு அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்! என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கையில் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

கோவை மாநகரின் புதிய அடையாளமாக மாறியுள்ள 'பெரியார் அறிவுலகம்' கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அப்போதைய முதல மைச்சர் திராவிட ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முயற்சியால் ரூ.301 கோடி செலவில் மிகப் பெரிய அளவில் கட்டிமுடிக்கப்பட்டு, ஆட்சி மாறிய காரணத்தால் கடந்த சில மாதங்கள் திறக்கப்படாமல் தள்ளிப் போடப்பட்டு, கடந்த அக்டோபர் 16 ஆம் தேதி அன்று தற்போதைய முதல மைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

1.5 லட்சம் புத்தகங்களைக் கொண்ட நூலகமாக மட்டுமல்லாமல், அறிவியலின் உச்சமான விண்வெளி அறிவியலை மய்யமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தப் "பெரியார் அறிவுலகம்" வெகுமக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. கோவை மற்றும் கோவையைச் சுற்றி



யுள்ள பலரும் இதனைப் பார்வையிட விரும்பி, கடந்த நான்கு நாட்களாகப் படையெடுத்துள்ளனர். இதில் கடந்த இரண்டு நாட்கள் (அக்.19, 20) ஆயுத பூஜை, விஜயதசமி என்ற பெயரில் விடுமுறை விடப்பட்டுள்ளது - மக்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பெயரில் அமைந்துள்ள அறிவியல் உலகமான 'பெரியார் அறிவுலகத்'திற்கு மதப் பண்டிகையின் பெயரால் விடுமுறையா? என்று நாம் கூட அல்ல... பக்தியாளர்களும் மற்றும் பொதுமக்களும் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். தந்தை பெரியார் என்பவர் யார்? அவருடைய கொள்கைகள் என்ன? என்று தெரிந்து கொண்டு தான் நம் மக்கள் பெரியாரை ஏற்றுள்ளனர்.

பெரியாரின் கொள்கையைப் பின்பற்றுபவர் முழுமையான பகுத்தறிவாளராக, பிசகின்றி பெரியாரைப் பின்பற்றுபவராக இருக்க வேண்டும் என்பதை எப்போதும் தமிழர்கள் எதிர்பார்ப்பார்கள். அதனால்தான், 'பெரியாரைப் பின்பற்றுகிறோம்' என்று சொல்வோர் ஏதேனும் அதிலிருந்து வழுவினால், 'அவர் வழுவிவிட்டாரே' என்று பக்தியாளர்கள் கூட மகிழ மாட்டார்கள். மாறாக, "ஒரு பகுத்தறிவாளர், பெரியார் பற்றாளர் இப்படி இருக்கலாமா?" என்று கேள்வி கேட்பார்கள். தங்களால் பெரியாரை முழுமையாகப் பின்பற்ற முடிய வில்லை என்றாலும், பெரியாரைப் பின்பற்றுவோர் சரியானவர்களாக இருக்க வேண்டும் என்பதே இந்த இயக்கம் குறித்து மக்கள் உருவாக்கிக் கொண்டுள்ள மதிப்பீடு அதுதான் இந்த இயக்கத்திற்கான பெருமையும் கூட! அப்படி வழுவிய 'பெரிய மனிதர்கள்' சிலரை மக்கள் தங்கள் நினைவிலிருந்தே அகற்றி விட்டனர்.

இதே மனநிலைதான் 'பெரியார் அறிவுலகத்' தைக் குறித்தும் மக்களுக்கும், நமக்கும்! அறிவுக்குப் பொருந்தாத பண்டிகைக்குப் பெரியார் அறிவுலகத்துக்கு விடுமுறை விடலாமா? 'சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகம் இயங்கும் போது, பெரியார் அறிவுலகத்துக்கு விடுமுறை ஏன்?' என்று மேனாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா சுட்டிக் காட்டியுள்ளார்.

பெரியார் அறிவுலகத்துக்கு அரசு விடுமுறை கூடாது!

விடுமுறைக் காலங்களில் தான், குழந்தைகள், குடும்பத்தினருடன் அனைவரும் சென்று வர வாய்ப்பிருக்கும். அப்படிப்பட்ட காலத்தில் விடுமுறை விடுவதால் பயன் என்ன? அடுத்து, வரவிருக்கும் தீபாவளி போன்ற மதப் பண்டிகைகளுக்கு 'பெரியார் அறிவுலகத்'துக்கு அரசு விடுமுறை விடக் கூடாது.

பணியாளர்களுக்கு அதற்கு மாற்றாக, வேறு நாட்களில் விடுமுறை வழங்கலாம். அல்லது தேவையான நாட்களில் விடுமுறை எடுத்துக் கொள்ள வழிவகுக்கலாம்.

மக்களின் கருத்தையும், நமது கருத்தையும் த.வெ.க. அரசும், அதன் முதலமைச்சரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

"பெரியார் வெறும் படமல்ல; பாடம்" என்பதை மக்கள் உணர்வார்கள்; அனைவருக்கும் உணர்த்துவார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி

கட்டத்தொட்டி எம்.குணசேகரன் இல்லத் திருமண விழா!

முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வாழ்த்துகிறார்! ஆ.கிருஷ்ணசாமி - கழக முன்னணியினர் பங்கேற்பு!

திருவள்ளூர், அக். 23- திருவள்ளூர் மத்திய மாவட்டம், பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி கட்டத்தொட்டி எம்.குணசேகரன் - ஜி.சாந்தி ஆகியோரின் இல்லத் திருமண வரவேற்பு விழா மற்றும் திருமண விழா, திருவள்ளூர் மாவட்டம், வேப்பம்பட்டு பகுதியில் உள்ள எம்.கே.என். பேலஸில் நடைபெற உள்ளது. நாளை (24.10.2026-சனிக்கிழமை) மாலை 6.30



மணிக்கு திருமண வரவேற்பு விழாவும், 25.10.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருமண விழாவும் நடைபெறுகின்றன.

இவ்விழாவிற்கு பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் டி. தேசிங்கு வரவேற்புரையாற்றுகிறார். திருவள்ளூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த் மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள் பரமேஸ்வரி கந்தன், இ.கந்தபாபு, சி.அண்ணாகுமார், சுமதி விஜயகுமார், ஜெ. சாக்ரடீஸ், ஜி.சுகுமார், ப.கந்தன், ஜி.பிரவீன் குமார், எம்.கோபிநாத், இ.வி.பி. பிரதீப் உள்ளிட்டோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் தலைமை வகித்து, மணமக்கள் ஜி.பிரீத்தி - ஆர்.ரஞ்சித் ஆகியோரை வாழ்த்துகிறார்.

மேலும், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு அணிச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் மாநில மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகளான சி. ஜெரால்டு, ம.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர், இளைஞரணி நடுக்குத் தகை கே.சுரேஷ்குமார், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்களான சன்.பிரகாஷ், ப.ச. கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, தி.வை.இரவி, ஆர்.ஜெயசீலன், தி.வே.முனுசாமி, என்.இ.கே.மூர்த்தி, ஜி.ராஜேந்திரன், பேபிசேகர், பொன்.விஜயன், ஜி. நாராயண பிரசாத், தங்கம் முரளி, டி.முரளி கிருஷ்ணன் உள்ளிட்ட கழக முன்னணியினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், ஊராட்சிக் கிளைக் கழகச் செயலாளர்கள், இந்நாள் மற்றும் முன்னாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர். விழாவின் முடிவில் கிளை இளைஞரணி அமைப்பாளர் ஜி.கருணாமூர்த்தி நன்றியுரை ஆற்றுகிறார்.



தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட, 5 வது மண்டலம், 63 வது வார்டில் உள்ள சுரங்கப்பாதை மற்றும் சி.எஸ்.ஐ.கார்லி மேல்நிலைப்பள்ளி தங்கும் இடத்தினை மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன் ஆய்வு மேற்கொண்டார். உடன் மாமன்ற உறுப்பினர் ஜோதிகுமார், பகுதி துணைச் செயலாளர் வேல்மணி மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம்.சி. சந்திரன்

அக்டோபர் 23 (2006)



தனது இளமைக் காலத்திலிருந்தே கழகப் பணியில் ஈடுபட்டு, அம்பத்தூர், முகப்பேர் பகுதிகளில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

அம்பத்தூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

"முகப்பேர் பகுதியில் கழகத்தை வளர்ப்பதில் வளர்பிறை சந்திரன்" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

மாதவரம் புழல் பகுதிகளில்

மழை நீர் வடியாமல் குண்டும் குழியுமான சாலைகள்!

புழல் எம். நாராயணன் மற்றும் கழக நிர்வாகிகள்

அதிகாரிகளிடத்தில் புகார்!

சென்னை, அக். 23- சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 16, 17,19, 23, 23 அ ஆகிய வட்டங்களில் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக ஆங்காங்கு மழை நீர் தேங்கி போக்கு வரத்து பாதிக்கப்பட்டு சாலைகள் எல்லாம் குண்டும் குழியுமாக காட்சியளிக்கின்றன.

16வது வட்டம் கடப்பாக்கம் முதல் ஆண்டார் குப்பம் வரையிலான சாலைகளிலும்

17வது வட்டத்திற்குட்பட்ட செட்டி மேடு, கொசப்பூர், தியாகி விஸ்வ நாததாஸ் நகர், அரியலூர் ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகளிலும்

19 ஆவது வட்டத்திற் குட்பட்ட மாத்தூர், மஞ் சம்பாக்கம் பிரதான சாலையில் ஒன்றாம் பகுதி ஏ. பி. துரைசாமி நாயுடு இல்லம் எதிரே மழைநீர் சாலையிலும்

23 வது வட்டத்திற்குட்பட்ட திருநீலகண்டநகர் இரண்டாவது தெரு, மகாவீர் கார்டன் முதல் பிரதான சாலை ஆகியவற்றிலும்

23 அ வட்டத்திற்குட்பட்ட கண்ணப்ப சாமி நகர் பகுதியிலும் இதே நிலையில் மழை நீர் தேங்கி உள்ளன.

இவைகளை சீர்செய்யக் கோரி மாதவரம் வடக்குப் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் அதிகாரிகளிடம் புகார் கூறினார்.

இந்நிகழ்வுகளின் போது வட்ட செயலாளர்கள் இ. கண்ணப்பன், கே. கருணாகரன், மாத்தூர் கா. தாமரைச்செல்வன், பி. எஸ். சந்துரு, வி.ஆர். குப்பன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(20.10.2026)



1. ஈரோடு மாவட்டம் பவானி அருகே நசியனூரில் விசைத்தறி பெண் தொழிலாளி அடித்துக் கொலை ....

2. விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே மாரனேரி கண்மாய் பகுதியில் நடந்து சென்ற கூலித் தொழிலாளி சரமாரியாக வெட்டிக் கொலை ...

3. விருதுநகர் அருகே தவசலிங்கபுரத்தில் முன்விரோதம் காரணமாக வீட்டினுள் புகுந்து சரமாரியாக கத்தியால் குத்தி கூலி தொழிலாளி கொலை...

4. திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அருகே தனியாக வசித்து வந்த மூதாட்டியை அடித்துக் கொலை செய்து ஆறு பவன் நகை கொள்ளை அடித்த கலெக்டர் அலுவலக தற்காலிகப் பணியாளர் சிக்கினார் ...

5. கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி அருகே நாட்றாம் பாளையத்தில் மனைவியை அடித்துக்கொலை செய்து. தற்கொலை செய்து கொண்ட கணவன் ...

6. சென்னை அடுத்த வேளச்சேரியில் தனியார் பெண்கள் விடுதிக்குள் புகுந்து பாலியல் சீண்டலில் ஈடுபட்ட வாலிபர் சிக்கினார் ...

7. ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே கட்சிப் பதவி வாங்கி தருவதாக கூறி பாலியல் தொல்லை கொடுத்த த.வெ.க. நிர்வாகி மீது பெண் போலீசில் புகார் ...



8. தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே நகராட்சி துணைத் தலைவரான அ.தி.மு.க. பிரமுகர் மீது பெண் பாலியல் புகார் ...

9. சேலம் மாவட்டம் தாரமங்கலம் அருகே எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவி கடத்திச் சென்று பலாத்காரம் செய்த வாலிபர் சிக்கினார் ....

10. தாம்பரம் அடுத்த மாடம்பாக்கத்தில் சாலையில் நடந்து சென்ற கல்லூரி மாணவியிடம் கையைப் பிடித்து இழுத்து பாலியல் தொல்லை கொடுத்த ஆட்டோ டிரைவர்கள் சிக்கினர்...

11. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே 11 வயதான வாய் பேச முடியாத மாற்றுத்திறனாளி சிறுமியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட பீகார் மாநில வாலிபர் சிக்கினார் ...

12. சென்னை தலைமைச் செயலகம் வளாகத்தில் உள்ள ராணுவ உயரதிகாரி வீட்டில் வாட்ச் மட்டும் செல்போன் திருட்டு ....

13. திருச்செந்தூர் முருகன் கோவில் உண்டியலில் திருட்டு. இரண்டு பேர் சிக்கினர்.

14. சென்னை ஆலந்தூரில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவிலில் அம்மன் நகைகள் திருட்டு ...

15. சென்னை பள்ளிக்கரணையில் ஐ.டி. நிறுவன ஊழியரை ஆட்டோவில் கடத்திச் சென்று கத்தி முனையில் பணம் பறிப்பு ..

16. ஆரணி அடுத்த கண்ணமங்கலம் - வேலூர் சாலையில் உள்ள சுங்கச்சாவடியில் ரகளை செய்த இருவரிடம் பெண் போலிஸ் சப் இன்ஸ்பெக்டர் விசாரித்த போது, சப் இன்ஸ்பெக்டர் மீது தாக்கு ...

17. சென்னை கொளத்தூர் அருகே சரித்திர பதிவேடு குற்றவாளியை பிடிக்கச் சென்ற சப் இன்ஸ்பெக்டர் மீது சரமாரி தாக்குதல் ...

18. மதுரை மாவட்டம் நாகமலை புதுக்கோட்டை அருகே பணியில் இருந்த போது நடுரோட்டில் சிறப்பு எஸ் ஐ. , சிறப்பு ஏட்டு மோதல் ...

19. பாளையங்கோட்டை மத்திய சிறையில் பரபரப்பு. சிறை அதிகாரி, வார்டன்கள் மீது கைதிகள் கொலை வெறித் தாக்குதல் ....

20. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே வடசேரியில் வாகன சோதனையில் ஈடுபட்ட சப் இன்ஸ்பெக்டரை கார் ஏற்றிக் கொல்ல முயன்ற கல்லூரி பேராசிரியர் சிக்கினார்....

21. சென்னை நகரின் மையப்பகுதியில் இரவு விருந்து நிகழ்ச்சிகளுக்கு போதைப்பொருள் விநியோகம். சீரழியும் இளைஞர்களின் வாழ்வு ....

22. கொடைக்கானலில் உள்ள தங்கும் விடுதிகளில் கஞ்சா மெத்த பெட்டமைன் உள்ளிட்ட போதைப் பொருட்கள் பதுக்கல். விடுதி உரிமையாளர் சிக்கினார் ...

23. நாகையில் த.வெ.க. மாவட்ட நிர்வாகி பூபாலனிடமிருந்து 137 கிலோ மெத்தபெட்டமைன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கு - சம்மன்.



நாகப்பட்டினம் அடுத்த பிரதாபுரம் கிராமத்தைச் சேர்ந்த ராஜ்குமார் என்பவருக்கு மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் சம்மன் .

த.வெ.க. மாவட்ட நிர்வாகி பூபாலனின் கூட்டாளியான ராஜ்குமாருக்கு மத்திய வருவாய் புலனாய்வு துறை சம்மன் அனுப்பியுள்ளது.

த.வெ.க. நிர்வாகியிடமிருந்து போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில் இதுவரை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

24. திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அருகே பனப்பாக்கம் கிராமத்தில் தனியார் டயர் நிறுவன குடோனில் கடந்த மாதம் டயர்கள் திருடுபோயின.

குடோனில் சூப்பர்வைசராக பணியாற்றிய த.வெ.க. நிர்வாகி அமுல்ராஜ், பல லட்சம் ரூபாய் மதிப்பிலான டயர்களை திருடியது சிசிடிவி மூலம் அம்பலம்.

இந்த திருட்டு வழக்கில் த.வெ.க. நிர்வாகிகள் வினோத், கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கும் தொடர்பு இருப்பது அம்பலம் இருவரும் தலைமறைவு.

ஆளுங்கட்சியின் முக்கிய பிரமுகர்கள் என்பதால் போலீஸிடம் சிக்க மாட்டோம் என நினைத்தோம் - த.வெ.க. நிர்வாகி அமுல்ராஜ் வாக்குமூலம்.

25. திருப்பெரும்புதூர்:

கடந்த வெள்ளிக்கிழமை முதல் மாயமான ஜார்க்கண்ட் மாநில 8 வயது சிறுமி.

ட்ரோன் கேமரா, மோப்ப நாய் உதவியுடன் சிறுமியை தேடும் பணி தீவிரம்.

சிறுமியின் உறவினர் வீடு அருகே மோப்ப நாய் வட்டமிட்டதால் பரபரப்பு.

4 நாட்களாகியும் குழந்தையை மீட்க முடியாமல் திணறும் காவல்துறை.



பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 வட்டம் 38 தமிழர் நகர், அன்னை சந்தியா நகர், புதிய வினோபாநகர், பகுதிகளில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு பொது மக்களுக்கு மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, வீடு வீடாக நேரில் சென்று உணவு வழங்கினார். உடன் சுகாதார துறை அதிகாரி எஸ்வந்த், மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்கள் உடனிருந்தனர்.